RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 258 செப்டம்பர் 22, 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# அக்.2-ல் தொடங்கும் ‘வெற்றிப் பயணம்’ திட்டம்: முதல்வர் விஜய் ஆலோசனை

சென்னை: செப்.22-

தமிழகத்தில் மகளிருக்கான இலவச பேருந்து பயண திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில், தவெக அரசின் ‘வெற்றிப் பயணம்’ திட்டத்தை முதல்வர் விஜய் வருகிற அக்.2 ஆம் தேதி தொடக்கிவைக்கிறார். இந்நிலையில் ‘வெற்றிப் பயண’ திட்டத்தின் முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் முதல்வர் விஜய் தலைமையில் இன்று நடைபெற்றது.



இது தொடர்பாக அரசு சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “முதல்வர் விஜய், 24.8.2026 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன் கீழ், தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் மகளிரும் போக்குவரத்துக் கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக்கூடாது என்ற சமூகநீதிச் சிந்தனையை இவ்வரசு முதன்மையாகக் கொண்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, “வெற்றிப் பயணம்” என்ற பெயரில், தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

தற்போது, 7 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நகர சாதாரணப் பேருந்துகள் மற்றும் 40 கி.மீ. வரையிலான மலைப்பகுதி சாதாரணப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றிப் பயணம் செய்து வருகின்றனர்.

‘வெற்றிப் பயணம்’ திட்டத்தின் மூலம் இச்சேவை மாநகர, நகர்ப்பகுதிகளில் இயங்கும் Express, LSS, டீலக்ஸ் (Deluxe) அரசுப் பேருந்துகள், புறநகர் சாதாரணப் பேருந்துகள் (Mofussil Ordinary) மற்றும் 40 கி.மீ.க்கு மேற்பட்ட மலைப்பகுதி சாதாரணப் பேருந்துகள் (Ghat Ordinary) ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டு, மொத்தமாக 12,692 பேருந்துகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

இதன்மூலம், 7 அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் மொத்த 18,413 திட்டமிடப்பட்ட பேருந்துகளில் 12,692 பேருந்துகள் (69 விழுக்காடு), மொத்த 1,94,649 நடைகளில் (Singles) 1,65,312 நடைகள் (85 விழுக்காடு) இயக்கப்படும். நாளொன்றுக்கு சுமார் 84.32 லட்சம் மகளிர் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறுவார்கள்.

மேலும், “வெற்றிப் பயணம்” பேருந்துகளின் மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்களுடனான (ETM) இணைப்புப் பணி நிறைவடைந்துள்ளது. சோதனை மற்றும் சரிபார்ப்புப் பணிகள் 25.09.2026-க்குள்ளும், சோதனை ஓட்டம் 27.09.2026 அன்றும் மேற்கொள்ளப்படும்.

“வெற்றிப் பயணம்” திட்டத்தினை முதல்வர், 2.10.2026 அன்று தொடங்கி வைக்கவுள்ளார். இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதும் தமிழக மகளிருக்கான எளிதில் அணுகக்கூடிய பொதுப் போக்குவரத்து வசதி பெருமளவில் கிடைக்கும்.

மேலும், மாணவிகள் தொலைதூரத்தில் உள்ள கல்லூரிகளுக்குச் செல்லவும், மகளிர் தங்கள் பணியிடங்களுக்குச் செல்லவும், மருத்துவம் மற்றும் அத்தியாவசியச் சேவைகளுக்கும் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க இயலும்” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலாளர் முனைவர் மு.சாய்குமார், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மு.அ.சித்திக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# “யாருடைய ஆசைக்காக மீனவர்களின் இடத்தில் தலைமைச் செயலகம் கட்டப்படுகிறது?” – மு.க.ஸ்டாலின்

சென்னை: செப்.22-

“கடற்கரையைப் பார்த்தபடி முதல்வரின் அலுவலகம் அமைய வேண்டும் என ஜோதிடர் ஒருவர் சொன்னதாலேயே முதல்வர் பட்டினப்பாக்கத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஒருவரின் ஆசைக்காக ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.” என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், “மீனவர்களின் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் அழிக்கும் வகையில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் தவெக அரசின் தன்னிச்சையான முடிவு கடும் கண்டனத்துக்குரியது. இந்த விவகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைக் கோரி, மீனவச் சங்கத்தினர் இன்று என்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தனர்.



இதற்கு எதிராக மீனவ மக்கள் நடத்தி வரும் போராட்டங்களுக்கு திமுக முழு ஆதரவைத் தருவதோடு, தனது முடிவில் இருந்து தவெக அரசு பின்வாங்கும் வரை மீனவச் சகோதரர்களுடன் உறுதியாகத் துணைநிற்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமைச் செயலகம் கட்ட எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே, தலைமைச் செயலகப் பயன்பாட்டுக்கெனக் கட்டப்பட்ட ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகமும் இருக்கிறது. வேண்டுமென்றால், அங்கே செயல்பட்டு வரும் மருத்துவமனையை வேறு இடத்துக்கு மாற்றிவிட்டு, மீண்டும் அதைத் தலைமைச் செயலகமாகப் பயன்படுத்தலாம். ஆனால், கடற்கரையைப் பார்த்தபடி முதல்வரின் அலுவலகம் அமைய வேண்டும் என ஜோதிடர் ஒருவர் சொன்னதாலேயே முதல்வர் பட்டினப்பாக்கத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

ஒருவரின் ஆசைக்காக ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், தமிழ்நாடு அரசு தற்போது தேர்ந்தெடுத்துள்ள இடத்தைச் சுற்றி ஏராளமான பள்ளிகள் அமைந்துள்ளன. இது கடுமையான போக்குவரத்து நெரிசல் கொண்ட பகுதியாகும். இங்கு தலைமைச் செயலகம் அமைந்தால் மாணவர்களும் பொதுமக்களும் கடும் அவதிக்குள்ளாக நேரிடும்.

மேலும், பட்டினப்பாக்கத்தில் புதிதாகத் தலைமைச் செயலகம் கட்டவுள்ள பகுதிக்குத் தெற்கில் முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம் ஆகிய மீனவ கிராமங்கள் உள்ளன. வடக்குப் பகுதியில் ராஜீவ் காந்தி நகர், பவானி குப்பம், இருதயபுரம், செல்வராஜ்புரம், டூமில் குப்பம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம் என மொத்தம் 12 குடியிருப்புப் பகுதிகள் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீட்டருக்குள்ளாகவே உள்ளன. முள்ளிக்குப்பம் பஞ்சாயத்து மற்றும் மீனவ மக்கள் அரசுக்கு அனுப்பி உள்ள கடிதத்துக்கு உரிய மரியாதை அளிக்க வேண்டும்.

இந்த ஆட்சி அமைய ஆதரவு தந்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில், பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமையாது என நினைத்தோம். ஆனால், அவர்களது எதிர்ப்பினையும் போராட்டங்களையும் மீறித் தவெக அரசு இதில் விடாப்பிடியாக இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. திமுகவும் இந்தப் போராட்டத்தில் வீரியத்துடன் இணைய வேண்டிய சூழலை ஆளும் தவெக அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த திராவிட மாடல் ஆட்சியில், பட்டினப்பாக்கம் கடற்கரையையொட்டி வாழும் மீனவ மக்களுக்கெனப் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தந்தோம். சீனிவாசபுரம் பகுதியில் உள்ள 1,356 நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் சிதிலமடைந்து உள்ளதோடு, இப்பகுதியில் ஆயிரம் குடிசைகளும் இருக்கின்றன. கடல்சீற்றத்தால் இவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குப் புதிய குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு முந்தைய கழக ஆட்சியில் பரிசீலனையில் இருந்த இடத்தில்தான் தற்போது 1,200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால், அரசாணையையே மறைத்துவிட்டு, “விரிவான திட்ட அறிக்கை மட்டுமே கோரியிருக்கிறோம், இதில் முதல்வர் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை” என தவெக அமைச்சர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசுவது மக்களை ஏமாற்றும் மோசடிச் செயலாகும். அரசாணை வெளியிட்ட பின்னர் முடிவெடுக்கவில்லை எனச் சொல்லும் அளவுக்குத்தான் இவர்களின் நிர்வாக அறிவு இருக்கிறதா? அல்லது, வாக்களித்த மக்களும் எதிர்க்கட்சிகளும் இவர்கள் எந்தப் பொய்யைச் சொன்னாலும் நம்புவார்கள் என நினைக்கிறார்களா?

மீனவர்களின் அழுகுரலுக்குத் தவெக அரசு செவிமடுத்து உடனடியாகத் தனது அரசாணையைத் திரும்பப் பெற வேண்டும். பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்கும் முடிவைக் கைவிடுவதாக முதல்வர் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அப்பகுதியில் மீனவர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டும்.

அராஜகப் போக்குடனும் ஆணவ எண்ணத்துடனும் பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டும் பணிகளைத் தொடர்ந்தால், மீனவர்களுடன் இணைந்து திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய போராட்டத்தினை முன்னெடுக்கும் என மீனவர் விரோத தவெக அரசினை எச்சரிக்கிறேன்.” என்று அந்த அறிக்கையில் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# “முதல்வரின் லண்டன் பயணத்தை கிண்டல் செய்வதா?” – அண்ணாமலைக்கு மரிய வில்சன் பதில்

சென்னை: செப்.22-

“முதலீடுகளை ஈர்க்க முதல்வர் விஜய் லண்டன் சென்றது குறித்து அண்ணாமலை கிண்டலாக பேசியுள்ளது சரியல்ல. இதனை கிண்டல், கேலி செய்வது நல்லதல்ல” என தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மரிய வில்சன், “முதலீடுகளை ஈர்க்க முதல்வர் விஜய் லண்டன் சென்றது குறித்து அண்ணாமலை கிண்டலாகப் பேசியுள்ளார். அண்ணாமலையை முதிர்ச்சியான அரசியல்வாதியாக பார்க்கிறேன். அவர் இப்படிப் பேசுவது சரியல்ல. ஒரு ரூபாய் கூட முதலீடுதான், எனவே எதையும் நாம் உதாசீனப்படுத்த முடியாது. இதனை கிண்டல், கேலி செய்வது நல்லதல்ல.

தமிழகத்தில் ஊழலற்ற ஆட்சி நடப்பதால் ஆகஸ்ட் 2025-ல் ரூ.96,567 கோடியாக இருந்த வரி வருவாய் இந்த ஆண்டு ஆகஸ்டில் ரூ.1,09,104 கோடியாக 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த ஆட்சியில் ஊழல் இல்லாததால் அரசின் வரி வருவாய் அதிகரித்துள்ளது. முதல் காலாண்டிலேயே இவ்வளவு முன்னேற்றம் இருக்கும்போது, அடுத்த காலாண்டில் வரி வருவாய் இன்னும் உயரும்.

ஒவ்வொரு மாதமும் அரசின் நிதிநிலை குறித்த விவரங்களை தெரிவிப்பேன். காலை உணவுத் திட்டம், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம், பால் கொள்முதல் போன்ற திட்டங்களுக்காக கடன் வாங்கும் தேவை உள்ளது. ஆனால், அதற்கேற்ப நாங்கள் வருவாயையும் பெருக்குவோம்.

கடந்த ஆட்சியில் ஆகஸ்ட் 2025ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு ஆகஸ்டு 2026ம் ஆண்டில் கடன் 19 சதவீதம் குறைந்துள்ளது. வருவாய் இன்னும் அதிகரிக்கும்போது கடனின் அளவு மேலும் குறையும்” என்றார்.

# துப்பாக்கிச் சுடுதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற இளவேனில் வாலறிவனுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை: செப்.22-

ஆசிய விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கிச் சுடுதலில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ள வீராங்கனை இளவேனில் வாலறிவனுக்கு தமிழக முதல்வர் விஜய் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், 10 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய மகளிர் அணியில் இடம்பெற்றதோடு, தனிநபர் பிரிவிலும் வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை இளவேனில் வாலறிவனுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

இந்திய வீராங்கனைகளின் இச்சாதனைகள் பாராட்டுக்குரியது. இது இளம் தலைமுறையினருக்கு இலக்கை நிர்ணயித்து, விடாமுயற்சியுடன் களமிறங்கி சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கிறது. இந்தியாவிற்குப் பெருமை சேர்த்துள்ள விளையாட்டு வீராங்கனைகளின் வெற்றிப் பயணம் மேலும் பல புதிய வரலாறுகளைப் படைக்கட்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 27 வயதான இளவேனில் வாளறிவன், மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தனிநபர் பிரிவில் வெள்ளி வென்றுள்ளார். 252.4 புள்ளிகளை பெற்று அவர் இரண்டாம் இடம் பிடித்தார். ஜப்பான் வீராங்கனை ஹினாதா டைச்சி 253 புள்ளிகளை பெற்று தங்கம் வென்றார்.

# “நாடு முன்னேற மக்கள் அரசியல் செய்ய வேண்டும்” – நடிகர் பிரகாஷ் ராஜ் கருத்து

திருச்சி: செப்.22-

திருச்சி தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கமம் விழா, கல்லூரி கலையரங்கில் நேற்று நடைபெற்றது.




விழாவுக்கு கல்லூரி முன்னாள் முதல்வர் மு.அ.முஸ்தபா கமால் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் க.அங்கம்மாள், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் கி.ஜெகநாதன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

சங்கப் புரவலரும், மாநிலங்களவை உறுப்பினருமான திருச்சி சிவா பேசுகையில், "நமது கல்லூரியின் மிகவும் பழமையான லங்கா கட்டிடம் ரூ.6.5 கோடியில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆட்சி மாறியதால் இப்பணியை முடிக்க பொதுப்பணித் துறை சுணக்கம் காட்டி வருகிறது. எனவே, இன்று நடைபெறவிருந்த அக்கட்டிடத் திறப்பு விழா தள்ளிப்போய் உள்ளது. பேருந்துக்கு காசு கொடுத்து வர முடியாத பொருளாதார நிலையில் இருந்த இக்கல்லூரி மாணவர்கள், இன்று காரில் வருகின்றனர். இந்த மாற்றம் உருவாக காரணமாக இருந்தவர் இக்கல்லூரியை உருவாக்கிய பெரியார்" என்றார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நடிகர் பிரகாஷ் ராஜ் பேசியது: “நடிப்பு எனக்கு தொழில். போராட்டம் எனக்கு வாழ்க்கை. சங்கடத்தில் இருக்கும் சக மனிதருக்கு உதவுவது, உடனிருப்பது எனது சுபாவம். நமது முன்னோர்கள் பலர் செய்த தியாகமே, நாம் இப்போது சுகமாக வாழக் காரணம்.

கல்லூரிகள் நமது வாழ்க்கையை செதுக்குகின்றன. இதுபோன்ற விழாக்கள் அனைத்து கல்லூரிகளிலும் நடைபெற வேண்டும். நமது நாட்டில் அரசியல் செய்ய வேண்டிய மக்கள், வேலை பார்க்கிறார்கள். மக்களுக்காக வேலை செய்ய வேண்டிய அரசியல்வாதிகள், அரசியல் செய்கின்றனர். இந்த நிலை மாறவும், நாடு முன்னேறவும் நாட்டு மக்களாகிய நாம் அரசியல் செய்ய வேண்டும்” என்றார்.

முன்னதாக முன்னாள் மாணவர்கள் சங்க பொதுச்செயலாளர் ராஜலிங்கம் வரவேற்றார். முடிவில், பொருளாளர் பாலசுப்பிரமணி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சோம. செந்தமிழ்ச்செல்வன், எம். சுரேஷ் கண்ணா. ராச. காமராஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் முன்னாள் மாணவர் சந்திப்பு 2026



செங்கல்பட்டு, செப்.22-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் “Connect Today, Transform Tomorrow” என்ற கருப்பொருளில் முன்னாள் மாணவர் சந்திப்பு 2026, செப்டம்பர் 19 அன்று கல்லூரி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் மாணவியும் IRIS குழும நிறுவன ங்களின் நிறுவுநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான டாக்டர் லதா ஏ.கிருஷ்ணா, Promoza Advertising Agency நிறுவனத்தின் நிறுவுநரும் நிர்வாக இயக்குநருமான கொள்ஷிகா பத்மநாபன், திரைப்பட நடிகையும் White & Brite Inc நிறுவனத்தின் நிறுவுநருமான மீனாட்சி மனோஹர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய சிறப்பு விருந்தினர்கள், கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவிகளின் நலனுக்கும் தங்களது பங்களிப்பை வழங்குவதற்கான உறுதிமொழி களைத் தெரிவித்தனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல், குடும்பச் சூழல் காரணமாக மனஅழுத்தம் மற்றும் பிற சிரமங்களை எதிர்கொள்ளும் மாணவிகளுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல் உள்ளிட்ட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, கல்லூரியில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்ற சுமார் 15 பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அவர்களின் சிறப்பான சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், கல்லூரிக்கும் தங்கள் துறைகளுக்கும் சிறப்புச் சேர்த்த முன்னாள் மாணவியரின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் “Notable Alumni Award 2026” விருதுகள் ஆறு முன்னாள் மாணவியருக்கு வழங்கப்பட்டன விருது பெற்றவர்கள் 1. டாக்டர் ஜமுனா கிருஷ்ணராஜ் BSNL, ஓய்வு எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் 1975 1978, பொருளியல் துறை, 2. டாக்டர் வி.சிவப்பிரியா இயக்குநர், தடய அறிவியல் துறை 1982 1985, தாவரவியல் துறை, 3. டாக்டர் எஸ்.சூரியகாந்தி முதல்வர், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கலைக் கல்லூரி, திருத்தணி 19901993, வணிகவியல் துறை, 4. ஆர். உஷா சிறப்பு தலைமை இயக்குநரின் முதன்மை தனிச் செயலாளர், CPWD, சென்னை 1988 1991, இயற்பியல் துறை, 5.கே.ஜெயலட்சுமி LIC of India, HGA 1985 1988, வணிகவியல் துறை, 6.ஹிந்துமதி பரசுராமன் தமிழ்நாடு அரசு, நிதித்துறை 2013 2016, B.Com (Honours) முன்னாள் மாணவர்களின் கல்லூரி உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் முன்னாள் மாணவர் சங்க அறிமுகம், “Kaloori Kadhaigal Retro to Metro” எனும் சிறப்பு நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் புகைப்பட அமர்வு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நாளில் கல்லூரி மாணவியரிடையே டிஜிட்டல் டிடாக்ஸ் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. தொடர்ந்து கைப்பேசி, கணினி உள்ளிட்ட மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துவதைக் குறைத்து, தொழில்நுட்பத்திலிருந்து சிறிது நேரம் விலகி, குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நேரத்தைச் செலவிடுவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்நாள் கடைப்பிடிக்கப்பட்டது. மாணவியர் டிஜிட்டல் சாதனப் பயன்பாட்டைக் குறைத்து, நேரடி உரையாடல், நட்பு மற்றும் சமூக உறவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டனர்.

இந்த முன்னாள் மாணவர் சந்திப்பில், 1975ஆம் ஆண்டு முதல் பல்வேறு ஆண்டுகளில் பயின்ற மொத்தம் 343 முன்னாள் மாணவியர் பதிவு செய்து பங்கேற்றனர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு முன்னாள் மாணவியர் தங்கள் பேராசிரியர்களையும் நண்பர்களையும் மீண்டும் சந்தித்து, கல்லூரி நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர், துணை முதல்வர், முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி பொறுப்பாளர்கள், இயக்குநர், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் மற்றும் முன்னாள் மாணவர் சங்கக் குழுவின் பேராசிரியர் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

முன்னாள் மாணவியரின் சாதனைகளை அங்கீகரித்து, அவர்களுக்கும் கல்லூரிக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதுடன், மாணவியரிடையே டிஜிட்டல் சாதனங்களின் பொறுப்பான பயன்பாடு குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற Alumni Meet 2026, கல்லூரியின் கல்வி மற்றும் சமூகப் பயணத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது.

# ஊத்துக்கோட்டையில் மேட்ரிமனி ஈவன்ட் (MURA NEXT GEN ) சார்பில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி



திருவள்ளூர், செப்.22-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை நேருபஜார் செல்லமே ஜவுளி கடை அருகில் உள்ள வீதியில் செயல்பட்டுவரும் மேட்ரிமோனி ஈவன்ட் (MURA NEXT GEN) தலைமை அலுவலகம் சார்பில் நிறுவனர் முரளி தலைமையில் ஞூர்ஸ் அன்ட் டிராவல்ஸ் பொறுப்பாளர் யுவராஜ் முன்னிலையில் விநாயகர் சதூர்த்தியை முன்னிட்டு விநாயகர் திருவுருவ சிலைக்கு சிறப்பு பூஜைகள் செய்து பகல் 1மணியளவில் பொதுமக்களுக்கு 9 வகையான அறுசுவை உணவுகள் சுமார் 500நபர்களுக்கு வழங்கப்பட்டது உடன் ஈவண்ட் ஊழியர்கள் கலந்து கொண்டு விநாயகரை வழிபட்டனர்



# தாம்பரம் குடிநீர் தேவைகளும் தீர்வுகளும் குறித்த விழிப்புணர்வு பேருரை

தாம்பரம், செப்.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் நடைபெற்ற சென்னை புறநகர் தாம்பரம் பகுதியில் மக்களின் குடிநீர் தேவைகள், குடிநீர் திட்டங்களின் வரலாறு மற்றும் எதிர்கால குடிநீர் தேவைகளுக்கான தீர்வுகள் குறித்து தாம்பரம் குடிநீர் தேவைகளும் தீர்வுகளும்” என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேருரை நடைபெற்றது.

தாம்பரம் மக்கள் நல சங்கம் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாலாறு, செம்பரம்பாக்கம் உள்ளிட்ட நீராதாரங்கள் மற்றும் TWAD / CMWSSB சார்பில் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், நெம்மேலி மற்றும் பெரூர் கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு குடிநீர் திட்டங்களின் வரலாறு, தற்போதைய நிலை மற்றும் எதிர்கால தேவைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை கருத்தாளர் பேராசிரியர் ஜெயராஜன், முன்னாள் இயக்குநர், MIDS மற்றும் SaciWATERS, சிறப்பு உரையாற்றினார்.

தாம்பரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான நீடித்த தீர்வுகள், நீர்வளப் பாதுகாப்பு மற்றும் எதிர்கால திட்டமிடல் குறித்து பங்கேற்றவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் குடியிருப்போர் நல சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தாம்பரம் மக்கள் நல சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# புரட்டாசி மாத திருவிழா- 1000 பக்தர்களுக்கு சமபந்தி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

மாதவரம், செப்.22-

மாதவரம் தொகுதி பம்மதுகுளம் ஊராட்சி அன்னை இந்திரா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் 40 ஆண்டுகளாக மொண்டியம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவந்த புரட்டாசி மாத முதல் வார சனிக்கிழமை தற்போது 53-ம் ஆண்டு புரட்டாசி மாத திருவிழாவை முன்னிட்டு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு சமபந்தி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் மூலவருக்கு சிறப்பு பூஜைகள் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் துரைக்கண்ணு- பங்குஜம்மாள், டி.எஸ்.குமார், எஸ்.பாரதி ஆகியோர் குடும்பத்தினர்கள் சார்பில் ஸ்ரீ பாண்டுரங்கன் பக்த ஜன சபாகுழுவினர்களின் பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னதாக சுனில்ரவிராஜன்-பவித்ரா ஆகியோர் குடும்பத்தினர்கள் ஏற்பாட்டில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு சமபந்தி அன்னதானத்தை ஆன்மீக சேவகர்கள் புண்ணியசேகர் - மலர்விழி ஆகியோர் வழங்கினர்.இதில் ஆலய நிர்வாகிகள் மற்றும் ஆன்மீக சிந்தனையாளர்கள் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டனர்.முடிவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (21.09.2026) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.



# பொன்னேரி அருகே பழவேற்காடு கடலில் 200 விநாயகர் சிலைகள் கரைப்பு

திருவள்ளூர், செப்.22-

பொன்னேரி சுற்றுவட்டார பகுதிகளில் விநாயகர் சதூர்த்தியை முன்னிட்டு வழிபாட்டிற்க்காக வைக்கப்பட்ட 200க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் 7ம் நாளில் பழவேற்காடு லைட்அவுஸ் அருகில் கடலில் கரைக்கும் பணி நடைபெற்றது.

சிலைகளைகரைக்கும் பணியில் கிரேன் ஜேசிபி மூலம் 40க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

பாதுகாப்புபணியில் தீயணைப்பு வீரர்கள் 100க்கும் மேற்பட்ட காவல்துறையினர்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பொதும க்களின்பாது காப்புகறுதி கடலில் இறங்க தடைவிதிக்கப்பட்டது எந்தவித அசம்பாவிதங்களும் இல்லாமல் இப்பணி நடைபெற்றது.



# இந்து முன்னணி சார்பில் விநாயகர் சதுர்த்தி நிறைவு விழா

மாதவரம், செப்.22-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சியில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கடந்த செப்டம்பர் 14-ம் தேதி விநாயகர் சிலைகள் அமைக்கப்பட்டு தினமும் இனிப்பு, பழங்களை படையலிட்டு சிறப்பு பூஜைகள் செய்து வந்தனர். பின்னர் உலக மக்கள் நன்மைகள் வேண்டி திருவிளக்கு பூஜைகளும் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து

விநாயகர் சதுர்த்தி நிறைவு நாளை முன்னிட்டு இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலைகளை எடுத்துச் செல்லும் நிகழ்ச்சி செங்குன்றம் பேரூராட்சியில் நடைபெற்றது. இந்து முன்னணி திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் குமார், நகரத் தலைவர் சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக கேஆர்வி கல்விக் குழுமத்தின் தலைவர் கே.ஆர். வெங்கடேசன், ஸ்ரீபெரியாண்டவர் ரைஸ்மில் உரிமையாளர் ஜெயச்சந்திரா தட்சிணாமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து கொடியசைத்து 10க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகளை கொண்டு செல்லும் வாகனங்களை துவக்கி வைத்தனர். இதில் ஆன்மீக சேவகர்கள் பாஜகவைச் சேர்ந்த ராஜா, கணேசன், நரேஷ்குமார், சத்தியநாராயணன், வாசுகி, நாகராஜன் மற்றும் லட்சுமி நாராயணன், பாடியநல்லூர் சிவன் கோயில் செயலாளர் சரவணன் உள்ளிட்ட ஆன்மிக பெரியோர்கள், பாஜக அனைத்து நிலை பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் மேளதாளத்துடன் வாகனத்தில் விநாயகர் சிலைகளை பட்டினப்பாக்ம் கடலில் கரைத்தனர்.



# இந்திய கூட்டுறவு அமைப்பின் தந்தை சர் பிரடெரிக் நிக்கல்சன் பிறந்த நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மலர்அஞ்சலி செலுத்தினர்

நீலகிரி, செப்.22-

இந்திய கூட்டுறவு அமைப்பின் தந்தை எனப் போற்றப்படும் சர் பிரடெரிக் நிக்கல்சன பற்றி அவரது பிறந்த நாளன்று நினைவு கூறுவது அனைத்து கூட்டுறவாளர்களின் கடமையாகும். இந்தியாவில் முதன்முறையாக எளியோர் பயன் படும் வகையில் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு பண்டக சாலைகள் துவக்கி அதன் மூலம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சேவைகள் செய்தார். அவர் கோவை மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியராக பணியாற்றிய சமயத்தில் குன்னூர் கூட்டுறவு நகர வங்கியில் 3 ஆவது உறுப்பினராக இருந்தவர். இவரது மறைவுக்குப் பிறகு இவர் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை எங்குள்ளது என்பது குறித்து கூட்டுறவாளர்கள் அறியாமல் இருந்த சமயத்தில் கூடுதல் பதிவாளர் சிவாஜி ( பணி ஓய்வு) கூடுதல் பதிவாளர் முருகன் அவர்கள் , அந்தோணிசாமி ( குன்னூர் நிக்கல்சன் கூட்டுறவு பண்டக சாலை முன்னாள் மேலாளர்) மற்றும் ரவிச்சந்திரன் உட்பட ஊழியர்கள் பல நாட்கள் தேடி அலைந்து பின்னர் அவரது கல்லறையை கண்டு பிடித்து தற்போது பல ஆண்டுகளாக அவரது பிறந்த நாள் மற்றும் நினைவு தினத்தில் கூட்டுறவாளர்கள் ஒன்று கூடி மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர். கல்லறையில் கூடுதல் பதிவாளர்கள் திருவாளர்கள் சிவாஜி , முருகன் மற்றும் ஏற்கனவே நீலகிரி மாவட்டத்தில் இணைப்பதிவாளர்களாக பணியாற்றிய குருமூர்த்தி, கூடுதல் பதிவாளர் பழனிசாமி, இணைப்பதிவாளர் அவர்கள் மற்றும் சித்ரா , இணைப்பதிவாளர் அவர்கள் கல்லறைக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தி வந்துள்ளனர். மேலும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் முன்னாள் ஊழியர்கள் ஒன்றினைந்து இந்நிகழ்வுகளை சிறப்பான முறையில் வருடந்தோறும் செய்து வருகின்றனர்.

# தேனி மாவட்டம் நீர் நிலைகள் மற்றும் பிற பகுதிகளில் உள்ள சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணிகளை உயர்நீதிமன்ற நீதிபதி.ஏ.செல்வம் (ஓய்வு) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



தேனி, செப்.22-
தேனி மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகள் மற்றும் பிற பகுதிகளில் உள்ள சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணிகளை உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.செல்வம் (ஓய்வு) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தேனி மாவட்டத்தில் நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைகளில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதுபோன்று, பிற இடங்களிலும் உள்ள சீமைக் கருவேல மரங்களும் அகற்றப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட மீறுசமுத்திரம் கண்மாயில் 41.26 ஹெக்டேர் பரப்பளவிலும், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம் தாமரைக்குளம் கண்மாயில் 70.16 ஹெக்டேர் பரப்பளவிலும், டி. மீனாட்சிபுரம் ஊராட்சி கோபாலபுரம் பகுதியில் உள்ள அழகர்செட்டிக்குளம் கண்மாயில் 9.70 ஹெக்டேர் பரப்பளவிலும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் வடவீரநாயக்கன்பட்டியில் ஊரணியில் 0.38 ஹெக்டேர் பரப்பளவிலும், கெங்குவார்பட்டி பேரூராட்சி மஞ்சளாறு வரத்துக்கால்வாயில் 5.12 ஹெக்டேர் பரப்பளவிலும், சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளதை உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.செல்வம் (ஓய்வு) அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, கொடுவிலார்பட்டி புதுக்குளம் கண்மாயில் 28 ஹெக்டேர் பரப்பளவிலும், சீலையம்பட்டி பகுதியில் உள்ள சிறுகுளம் கண்மாயில் 23.55 ஹெக்டேர் பரப்பளவிலும், சின்னமனூர் நகராட்சி கீழபூலானந்தபுரம் பகுதியில் உள்ள செங்குளம் கண்மாயில் 18.48 ஹெக்டேர் பரப்பளவிலும், கருங்கட்டான்குளம் கண்மாயில் 69.60 ஹெக்டேர் பரப்பளவிலும், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் அணைக்கரைப்பட்டி ஊராட்சி பி.மீனாட்சிபுரம் பகுதியில் உள்ள தாசன் செட்டிகுளம் கண்மாயில் 11.53 ஹெக்டேர் பரப்பளவிலும் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டுவருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து வைகை அணையின் நீர்பிடிப்புப் பகுதியினை நேரில் பார்வையிட்டார்.

மேலும், சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதுடன் நின்றுவிடாமல் அவை மீண்டும் வளராத வகையில் வேருடன் முழுமையாக அகற்ற வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், கண்மாய் மற்றும் அரசு நிலங்களின் எல்லைகளை நில அளவையர்கள் மூலம் முறையாக அளவீடு செய்து எல்லைக் கற்களை நிறுவி. எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையில் தொடர்ந்து கண்காணித்து பராமரிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதேபோல, தனியார் நிலங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்ற சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு அலுவலகங்கள் மூலம் உடனடியாக அறிவிப்புப் பிரசுரங்களை வழங்க அறிவுறுத்தினார். பின்னர், அழகர்செட்டிகுளம் கண்மாய் கரையில் உயர்நீதிமன்ற நீதிபதி.ஏ. செல்வம் (ஓய்வு) அவர்கள் பனை விதைகளை நடவு செய்தார்.இவ்வாய்வில், மாவட்ட வருவாய்அலுவலர்.ப.ராஜகுமார், சார் ஆட்சியர் (பெரியகுளம்). தவ்லேந்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ன.இராமகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் (உத்தமபாளையம்) .சையது முகைதீன் இப்ராஹிம், உதவி இயக்குநர் (நில அளவை). அப்பாஸ், செயற்பொறியாளர் (நீர்வளத்துறை).சரவணன், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை). குமணன், உதவி செயற்பொறியாளர் (நீர்வளத்துறை) மல்லிகா, வட்டாட்சியர்கள் ரத்தினம் (தேனி).பாலசண்முகம் (உத்தமபாளையம்), சுருளி (போடிநாயக்கனூர்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.





# பல்வேறு துறைகளில் சாதித்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி வாழ்த்து

திருப்பத்தூர், செப்.22-
திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூரில் தமிழன் தொலைக்காட்சியின் ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜை சிறப்பு பட்டிமன்றம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு தமிழன் டிவி கயல் பெனிபிட் சிட்ஸ் மற்றும் கோரோ என்டர்டைன்மென்ட் இணைந்து விருது வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக திரைப்பட நகைச்சுவை நடிகர் வையாபுரி அவர்களும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் N.திருப்பதி MLA. கலந்து கொண்டு திருப்பத்தூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் சாதித்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி வாழ்த்தினார்கள். தமிழன் டிவியின் சிறப்பு மாண்புமிகு மக்கள் சேவகர் விருது திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் N.திருப்பதி MLA., வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விஜய் டிவி புகழ் K.P.Y. பழனி பட்டிமன்ற நடுவராக பொறுப்பேற்று அதிக சுதந்திரத்தை அனுபவிப்பது ஆண்களே பெண்களே என்ற தலைப்பில் விறுவிறுப்பாக பட்டிமன்றத்தை நடத்தி நடுவர் தீர்ப்பை கூறி நிறைவு செய்தார். கோரா என்டர்டைன்மெண்ட்ஸ் இயக்குனர் R.நவீன் பிரகாஷ் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி முடித்து அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார்.




■ மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான கல்விக்கடன் மேளாவை உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் தொடங்கி வைத்தார்.மாவட்ட கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையிலும், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் முன்னிலையிலும் நடைபெற்ற இம்முகாமில், 275 மாணவ-மாணவிகளுக்கு ரூ.30.35 கோடி மதிப்பிலான கல்விக்கடன் பெறுவதற்கான அனுமதிக்கடிதங்களை அமைச்சர் வழங்கினார்.நிகழ்ச்சியில் மதுரை வடக்கு எம்.எல்.ஏ. அ.கல்லாணை, மதுரை மேற்கு எம்.எல்.ஏ. எஸ்.ஆர். தங்கப்பாண்டி, மதுரை கிழக்கு எம்.எல்.ஏ. சோ.கார்த்திகேயன், சோழவந்தான் எம்.எல்.ஏ. எம்.வி.கருப்பையா, மதுரை தெற்கு எம்.எல்.ஏ. எம்.எம்.கோபிசன், மாநகராட்சி மேயர் (பொ)/துணை மேயர் தி.நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# கிருஷ்ணகிரி அரசு நிதியுதவி பெறும் பள்ளியில் ரூ.10 லட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு மையம்; நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத் திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி, செப்.22-
கிருஷ்ணகிரியில் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலைப்பள்ளியில் சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் வகையில், பள்ளி நிர்வாகம் சார்பில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத்திடம் குடிநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சுமார் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி வளாகத்தில் குடிநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கப்பட்டது. பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அதன் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், மாணவர்களின் பயன்பாட்டிற்காக குடிநீர் சுத்திகரிப்பு மையத்தை ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கேற்றியும் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத்துக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் புனித பாத்திமா அன்னை திருத்தலத்தின் பங்குத்தந்தை அருள்ராஜ் ஆகியோர் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் காங்கிரஸ் மாநிலக் குழு உறுப்பினர் ஏகம்பவாணன், மாவட்ட துணைத்தலைவர் பி.சி. சேகர், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் நாஞ்சில் ஜேசு, ராஜா குமாரவேல், நாராயணமூர்த்தி, சேலம் மண்டல ரயில்வே குழு உறுப்பினர் ரஹ்மத்துல்லா, நகர காங்கிரஸ் தலைவர் லலித் ஆண்டனி, காங்கிரஸ் எஸ்.சி., எஸ்.டி. பிரிவு மாநில அமைப்பாளர் ஆறுமுக சுப்பிரமணி, நகர்மன்ற உறுப்பினர் வினாயகம், ஓசூர் மாநகர தலைவர் ஜாதீக் கான், முன்னாள் நகர தலைவர் வின்செண்ட், டாக்டர் தகி, துணைத்தலைவர் இருதயம் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தமிழகத்தில் சேவல் சண்டைக்கு தடை விதிக்கவில்லை

## முறைப்படுத்தவே சுற்றறிக்கை: ஐகோர்ட்டில் டிஜிபி விளக்கம்

சென்னை, செப்.22-
தமிழகத்தில் சேவல் சண்டைக்கு தடை விதிக்கவில்லை; முறைப்படுத்தவே சுற்றறிக்கை: ஐகோர்ட்டில் டிஜிபி விளக்கம் அளித்துள்ளார். ஈரோடு, நாமக்கல் கோயில் திருவிழாக்களில் சேவல் சண்டைக்கு அனுமதி கோரி அருண்குமார் என்பவர் வழக்கு. சேவல் சண்டைக்கு தடை இல்லாததால் காவல் துறையினரை அணுகி மனுதாரர் அனுமதி பெறலாம் என உயர் நீதிமன்றம் தெரிவித்தது

# பழனியில் குப்பை கிடங்காக மாறிய திலகர் சிறுவர் பூங்கா சமூக ஆர்வலர்கள் கொந்தளிப்பு



திண்டுக்கல், செப்.22-
திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரம் பகுதியில் உள்ள 28 வது வார்டு திலகர் பூங்காவில் நகராட்சி சார்பில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தன.

இதனை தொடர்ந்து தற்போது பூங்கா அருகே நகராட்சி சார்பில் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு மக்கும் குப்பை மக்காத குப்பை என்று பிரித்து வருகின்றனர்.

தொடர்ந்து விளையாட்டு மைதானம் முறையாக நகராட்சியால் பராமரிக்கப்படாமல் முட்புதர்கள் மண்டி காணப்பட்டு வருகின்றன.

மேலும் விளையாட்டு மைதானத்தில் குப்பைகள் நகராட்சி சார்பில் கொட்டப்பட்டுள்ளதால் அப்பகுதி வாழும் பொது மக்களுக்கு பல்வேறு நோய் தொற்றுகள் ஏற்பட்டு வருகின்றன..

தொடர்ந்து விளையாட்டு மைதானம் அருகே ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் நியாய விலைக் கடைகள் அமைந்துள்ளதால் பொதுமக்கள் மூக்கை பிடித்துக் கொண்டு செல்லும் அவல நிலை ஏற்பட்டு வருகின்றன..

இந்நிலையில் அப்பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள் மகுடீஸ்வரன் வாய்ஸ் ஆப் பழனி கமலேஷ் கண்ணன் ஆகியோர் தலைமையில் பொதுமக்கள் ஒன்று கூடி நகராட்சியிடம் முறையிட்டு வருகின்றனர்..

உடனடியாக நோய் தொற்று ஏற்பட காரணமாக விளங்கி வரும் குப்பைத் தொட்டி அகற்றப்பட வேண்டும் விளையாட்டு மைதானத்தில் உள்ள கட்டிட கழிவுகள் மற்றும் குப்பைகளை அகற்றி விளையாட்டு சாதனங்களை பராமரித்து மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் விக்டர், சுரேஷ், ராகுல், சிராஜ், உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் தொமுச சார்பில் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



சிவகங்கை, செப்.22-
சிவகங்கையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் தொழிலாளர், விவசாயிகள் தொடர்பான கொள்கைகளைக் கண்டித்து, சிவகங்கை மாவட்ட அனைத்து தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள் (தொமுச) சார்பில் சிவகங்கை அரண்மனை வாசல் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

டாஸ்மாக், போக்குவரத்து, மின்வாரியம், பாம்கோ, அமைப்புசாரா ஓட்டுநர்கள், சிவில் சப்ளைஸ், டாமின், பொது சுகாதாரம், 108 ஆம்புலன்ஸ் உள்ளிட்ட பல்வேறு தொமுச அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

சிவகங்கை மாவட்டச் செயலாளர் கவுன்சில் சோம. சதீஷ்குமார் வரவேற்றார். மாவட்டத் தலைவர் எம். முருகேசன் தலைமை வகித்தார். தங்கச்சாமி, சிலம்பு, சிவில் சப்ளை முருகேசன், பொருளாளர் வடிவேல், பச்சமால், பாம்கோ யோகநாதன், நாகராஜன், டாஸ்மாக் கருப்புச்சாமி, டாமின் பி.குமார், மானாமதுரை சொக்கு, போக்குவரத்து முருகன், செம்பூர் காட்டுராஜன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மாநில தொமுச பேரவையின் அமைப்புச் செயலாளர் நெல்லை தருமன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று கண்டன உரையாற்றினார். அப்போது மத்திய, மாநில அரசுகளின் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் தொடர்பான கொள்கைகளை விமர்சித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார்.

ஒன்றிய அரசின் நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை அமல்படுத்தக் கூடாது, மின்வாரியம் மற்றும் 108 ஆம்புலன்ஸ் சேவையை அரசே ஏற்று நடத்த வேண்டும், விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும், தடையற்ற மின்சார சேவையை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் கண்டாங்கிபட்டி மந்தக்காளை, பாம்கோ சரவணன், மலைச்சாமி, சுரேஷ்குமார், போக்குவரத்துத்துறை பொன்னுச்சாமி, வெங்கடாஜலபதி, கிருஷ்ணமூர்த்தி, டாஸ்மாக் தொமுச ராஜ்மோகன், மானாமதுரை ஆட்டோ தொமுச எம்.எம்.கண்ணன், 108 ஆம்புலன்ஸ் தொமுச சுந்தர், நகர் திமுக சுப. ஜெயக்குமார் உள்ளிட்ட பல்வேறு சங்க மற்றும் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர். ஏற்பாட்டாளர்கள் தரப்பில் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

# செங்குன்றத்தில் ஏழை எளியமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்



மாதவரம், செப்.22-
மாதவரம் தொகுதி செங்குன்றம் ஆர்.ஆர்.சி. தெருவில் முன்னாள் நாரவாரிகுப்பம் பேரூராட்சி தலைவர், முன்னாள் காங்கிரஸ் கமிட்டி மாவட்ட துணை தலைவர் மற்றும் செங்குன்றம் பளுதூக்கும் தொழிலாளர்கள் சங்க தலைவர், முன்னாள் லாரி உரிமையாளர் சங்க தலைவர் மறைந்த ஆர். ஆர்.சக்கரபாணியின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஏழை எளியமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில செயலாளர் ஆர்.ஆர். சாந்தகுமார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் மாவட்ட தலைவர் ஆர்.எம்.தாஸ் மற்றும் செங்குன்றம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆர்.ஆர்.ராஜுவ்காந்தி, மாநில சட்டபிரிவு பொது செயலாளர் ஆர். மதுமதி, செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 6-வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலர் லீலாவதிசாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு ஆர்.ஆர்.சக்கரபாணி திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி தீபாராதனை காண்பித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் சுற்றுவட்டாரத்தில் உள்ள சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளியமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் புழல் குபேந்திரன், டாக்டர் வெங்கடேசன், வட்டார தலைவர்கள் நித்தியானந்தம், வேல்முருகன் மற்றும் நிர்வாகிகள் தீன்அலி, யாசீன்,நூர்தீன், நிஷாந்த், ஆனந்தன், சுரேஷ், ரவி, ரஜினி உள்ளிட்ட ஆர். ஆர்.சி. குடும்பத்தினர்கள், நண்பர்கள், சமூக ஆர்வலர்கள்,கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# தீபாவளி விற்பனைக்கு கோ-ஆப்டெக்ஸ் தயார்: ரூ.1.13 கோடி இலக்கு!





சிவகங்கை, செப்.22-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிவகங்கை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 30 சதவீத சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, முதல் விற்பனையையும் மேற்கொண்டார்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1935-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தமிழகம் முழுவதும் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி ரகங்களை 'கோ-ஆப்டெக்ஸ்' என்ற வணிக முத்திரையில் 146 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருவதாக ஆட்சியர் தெரிவித்தார்.

தீபாவளியை முன்னிட்டு புதிய வடிவமைப்புகளில் பட்டுச் சேலைகள், பருத்திச் சேலைகள், பருத்தி வேட்டிகள், படுக்கை விரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு கைத்தறி ரகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் பாரம்பரிய பட்டு மற்றும் பருத்தி ரகங்களில் புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களுடன் மதிப்புக் கூட்டப்பட்ட ரகங்களும் இடம்பெற்றுள்ளன.

கைத்தறி விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு இந்த ஆண்டும் பட்டு மற்றும் பருத்தி கைத்தறி ரகங்களுக்கு 30% சிறப்பு தள்ளுபடி வழங்கியுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இரண்டு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கும் சேர்த்து இந்த ஆண்டு ரூ.1.13 கோடி தீபாவளி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தீபாவளி விற்பனை ரூ.90.96 லட்சமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கோ-ஆப்டெக்ஸ் ஜவுளி ரகங்களை www.cooptex.gov.in இணையதளம் மூலமாகவும் வாங்கலாம். மாதாந்திர சேமிப்புத் திட்டத்திலும் வாடிக்கையாளர்கள் சேர்ந்து பயன்பெறலாம்.

அரசு மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்கள், பொதுமக்கள் கைத்தறி ஆடைகளை வாங்கிப் பயன்படுத்துவதன் மூலம் நெசவாளர்களின் உற்பத்தி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பங்களிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் சந்திரசேகரன், துணை மண்டல மேலாளர் அழகுசெல்வி, விற்பனை நிலைய மேலாளர் முல்லைக்கொடி, அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் பிரம்மாண்டமாக நடைபெற்ற 'புல்லட் திருவிழா'! ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராயல் என்ஃபீல்டு ரைடர்கள் உற்சாக பங்கேற்பு



மதுரை, செப்.22-

ராயல் என்ஃபீல்டு நிறுவனத்தின் 125-வது ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, உலகளவில் நடைபெற்ற 'ஒன் ரைடு 2026' நிகழ்வின் ஒரு பகுதியாக, மதுரையில் 'புல்லட் திருவிழா' அரசரடி யு.சி. பள்ளி மைதானத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராயல் என்ஃபீல்டு ரைடர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

உலகம் முழுவதும் 63 நாடுகளில் 1.25 லட்சத்துக்கும் மேற்பட்ட ராயல் என்ஃபீல்டு ரைடர்கள் ஒரே நாளில் பங்கேற்ற 'ஒன் ரைடு 2026' நிகழ்வின் ஒரு பகுதியாக மதுரையிலும் இந்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

ராயல் என்ஃபீல்டின் பாரம்பரியம், மோட்டார்சைக்கிளிங் கலாசாரம் மற்றும் ரைடர்களின் சகோதரத்துவத்தை கொண்டாடும் வகையில் நடைபெற்ற இவ்விழாவில், ரைடர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை கவரும் வகையில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

விழாவில் மோட்டார்சைக்கிள் சார்ந்த விளையாட்டுகள், குழந்தைகளுக்கான பிரத்யேக விளையாட்டுகள், கலாசார நடன நிகழ்ச்சிகள், மேஜிக் ஷோ, இசை நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், ராயல் என்ஃபீல்டின் பல்வேறு மோட்டார்சைக்கிள் மாடல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. வாடிக்கையாளர்கள் மோட்டார்சைக்கிள்களின் செயல்திறனை நேரடியாக அனுபவிக்கும் வகையில் பிரத்யேக டெஸ்ட் ரைடு டிராக்கும் அமைக்கப்பட்டிருந்தது.

ராயல் என்ஃபீல்டு ஹெல்மெட்டுகள், ரைடிங் கியர்ஸ், ஆடைகள், எக்ஸ்சேஞ்ச் மேளா மற்றும் உணவு அரங்குகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

விழாவின் முக்கிய நிகழ்வாக, ராயல் என்ஃபீல்டின் புதிய Himalayan 440 மோட்டார்சைக்கிள், ரைடர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முன்னிலையில் அறிமுகம் செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் ராயல் என்ஃபீல்டு டீலர்களான கே.ஜி. ஆதிலிங்கம், கே.ஜி. வெங்கடேசன், ஜி.ஏ. ராஜ்குமார், பி. ஈஷ்வர் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், ராயல் என்ஃபீல்டின் மண்டல வர்த்தக மேலாளர் ஜி.வி. பிரவீன்குமார், மண்டல சேவை மேலாளர் ஆர். தமிழழகன், பகுதி விற்பனை மேலாளர்கள் பிரபாகரன், முரளி, பகுதி சேவை மேலாளர் பழனிவேல், டீலர் மேம்பாட்டு மேலாளர் பிரபு, தொழில்நுட்ப ஆதரவு மேலாளர் சாய் பிரதீப் உள்ளிட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மதுரையைச் சேர்ந்த ஏராளமான ராயல் என்ஃபீல்டு உரிமையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஒரே இடத்தில் ஒன்றிணைந்து, தங்களது மோட்டார்சைக்கிளிங் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும், ராயல் என்ஃபீல்டின் பாரம்பரியமான ரைடிங் கலாசாரத்தை உற்சாகமாக கொண்டாடினர்.

இதன் சிறப்பம்சமாக, கடந்த 16 ஆண்டுகளாக மதுரையில் செயல்பட்டு வரும் ராயல் பாண்டியாஸ் மதுரை என்ஃபீல்டர்ஸ் கிளப்பின் 16-வது ஆண்டு விழாவும் நடைபெற்றது. ராயல் பாண்டியாஸ் ரைடர்கள் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரின் முன்னிலையில் கேக் வெட்டி ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

'டெம்பிள் சிட்டி' என அழைக்கப்படும் மதுரை, ராயல் என்ஃபீல்டு மற்றும் புல்லட் ரைடர்களின் பெருமளவிலான வரவேற்பு மற்றும் பங்கேற்பால் 'புல்லட் சிட்டி' என்ற சிறப்புப் பெயரை பெறும் வகையில் வளர்ந்து வருகிறது.

மதுரையின் பாரம்பரியத்தையும், ராயல் என்ஃபீல்டின் மோட்டார்சைக்கிளிங் கலாசாரத்தையும் ஒருங்கிணைத்த இந்த 'ஒன் ரைடு 2026' நிகழ்வு, ரைடர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடையே பெரும் உற்சாகத்தையும் வரவேற்பையும் பெற்றது.



■ மதுரை மாவட்டம்,மேலூர் நகராட்சி வார்டு எண் 21 மலம்பட்டியில் மாநில நிதிக்குழு மானியம் (இயக்குதல் மற்றும் பராமரிப்பு, உள்கட்டமைப்பு) 2025-26 திட்டத்தின் கீழ் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார்

## மானாமதுரையில் தொடரும் மின்தடை

# புகார் தெரிவிக்க அதிகாரிகளை தொடர்புகொள்ள முடியவில்லை என பொதுமக்கள் குமுறல்

மானாமதுரை, செப்.22-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அண்ணா சிலை பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின்தடை காரணமாக பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருவதாக புகார் எழுந்துள்ளது.

நேற்று காலை 11.30 மணியளவில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில், மதியம் 2.50 மணி வரையிலும் மின்விநியோகம் சீராகவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மின்தடை தொடர்பாக புகார் தெரிவிக்க மின்வாரிய உதவிப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் சிவகங்கை மேற்பார்வைப் பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் மொபைல் எண்களை தொடர்புகொண்டபோதும் பதில் கிடைக்கவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதேபோல் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் துண்டிக்கப்பட்ட மின்சாரம் இரவு 8.12 மணியளவில்தான் மீண்டும் வந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மாணவர்கள் காலாண்டுத் தேர்வு எழுதிவரும் நேரத்தில் நீண்ட நேர மின்தடை ஏற்படுவது படிப்பை பாதிப்பதாக பெற்றோர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியான மின்தடைக்கான காரணத்தை மின்வாரியம் பொதுமக்களுக்கு தெரிவிப்பதுடன், புகார்களுக்கு அதிகாரிகள் உடனடியாக பதிலளித்து சீரான மின்விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பத்திரம் காணவில்லை

சிவகங்கை மாவட்டம் சிதம்பரம் நகர்,சாம்பவிகா பள்ளி எதிரில்,

க/எண்: 2/56A, என்ற முகவரியில் வசித்து வரும் த/பெ மாரியப்பன் கோகிலாவதி எனும் நான் கடந்த 21/09/2026 அன்று சிவகங்கை பேருந்து நிலையம் அருகில் என்னுடைய அசல் பத்திரம் ஜெராக்ஸ் கடை செல்லும் வழியில் தவறிவிட்டது .சொத்துவிபரம் சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 9247/2018ஆவண எண்ணாகபதிவுசெய்யப்பட்டுள்ளது.மேற்கண்ட ஆவணத்தை பற்றி சிவகங்கை காவல் நிலையத்தில் ஆன்லைனில் புகார் எண்ணாக OLC.609260006 0128 பதிவு செய்யப்பட்டது.

அசல் ஆவணத்தை கண்டெடுத்தவர்கள் அருகில் உள்ளகாவல்நிலையத்தில்அல்லது கீழ்கண்டமுகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மா.கோகிலாவதி

**த/பெ மாரியப்பன்**

க/எண், 2/56A சிதம்பரம் நகர்

சாம்பவிகா பள்ளி எதிரில்

சிவகங்கை மாவட்டம் –630561

செல்:9080656119



■ பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் நாளை தொடங்கி வைக்க உள்ளதை முன்னிட்டு திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-2, நஞ்சப்பா நகர் பகுதியில் உள்ள சமையல் கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாநகராட்சி ஆணையாளர் திரு. எம்.பி.அமித் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# சிவகங்கையில் உலக எழுத்தறிவு தின கருத்தரங்கம் மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ் வழங்கல்





சிவகங்கை, செப்.22-

சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் அறிவொளி சங்கமம் நான்காம் ஆண்டு விழா மற்றும் உலக எழுத்தறிவு தின கருத்தரங்கம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உள்ள அறிவொளி நினைவுத்தூண் அருகே தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமையில் எழுத்தறிவு தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் உறுதிமொழியை வாசிக்க, அறிவொளி சங்கம உறுப்பினர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

தொடர்ந்து கலைக்குழுவினரின் பறை இசையுடன் எழுத்தறிவு தின விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் ராசு தலைமையில் எழுத்தறிவு விழிப்புணர்வு முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

கவிஞர் தமிழ்க்கனல், அறிவொளி ஆனந்தம், பரிமளா, தமயந்தி, ராசு ஆகியோரின் அறிவியல் பாடல்களுடன் கருத்தரங்கம் தொடங்கியது. அறிவொளி இயக்க உறுப்பினர் மாலா வரவேற்றார். விழா ஒருங்கிணைப்பாளர் பாலசுப்ரமணியன் தலைமை உரையாற்றினார்.

அகில இந்திய மக்கள் அறிவியல் இயக்க கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் ராஜமாணிக்கம் தொடக்க உரையாற்றினார். அறிவொளி இயக்க உறுப்பினர் மணிமேகலை அறிமுக உரையாற்றினார். அகில இந்திய மக்கள் அறிவியல் இயக்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆஷா மிஸ்ரா கருத்துரையாற்றினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் பணிகள் குறித்து மாவட்டச் செயலாளர் பிரபு நோக்க உரையாற்றினார். மாநிலச் செயலாளர் காந்தி வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உலக எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு "எதிர்கால இந்தியாவுக்கான ஏற்றமிகு கல்வி" என்ற தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்கள் மற்றும் சிறப்பிடங்களைப் பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு புத்தகங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநிலத் தலைவர் மருத்துவர் திருநாவுக்கரசு பரிசுகளை வழங்கி நிறைவுரையாற்றினார். இணை ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் நன்றி கூறினார். ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள், விழாக்குழு மற்றும் சமம் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.




# மாநில யோகாசன சாம்பியன்ஷிப்: சிவகங்கை மாணவர்கள் சாதனை

காரைக்குடி, செப்.22-

தமிழ்நாடு யோகாசன பெடரேஷன் சார்பில் 9-வது தமிழ்நாடு யோகாசன ஸ்போர்ட்ஸ் சாம்பியன்ஷிப் ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் நேற்று 05.09.2026 சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் தமிழகம் முழுவதிலும் இருந்து 1,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் சிவகங்கை மாவட்டம் சார்பில் 80 மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

சிவகங்கை மாவட்ட அணியை தமிழ்நாடு யோகா பெடரேஷன் சிவகங்கை மாவட்ட செயலாளர் யோகா ஆச்சார்யா பூ. புவனேஷ், துணைச் செயலாளர் மற்றும் பயிற்சியாளர் மா. பாலமுருகன், பயிற்சியாளர் ம. சிந்தலை சூர்யா ஆகியோர் சிறப்பாகப் பயிற்றுவித்து வழிநடத்தினர்.

மாநில அளவிலான போட்டியில் சிறப்பாக செயல்பட்ட சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 32 மாணவர்கள் தேசிய அளவிலான யோகா போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று பரிசுகளை பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் சிவகங்கை மாவட்ட யோகா பெடரேஷன் சார்பில் வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டன.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161